மலர் 1 இதழ் 4 ஏப்ரல், 2017 ISSN : 2454-3993

# உலகமயமாக்கலும் தமிழிலக்கியப் புனைவுகளும்

ந.முருகேசபாண்டியன்
mpandi2004@yahoo.com

நான்காண்டுகளுக்கு முன்னர் நண்பர் சுதீர்செந்திலுடன் இந்தோனேஷியாவில் உள்ள பாலித் தீவுக்குச் சென்றிருந்தேன். அப்பொழுது நாங்கள் ஏற்கனவே இணையம் மூலம் பதிவு செய்திருந்த ஹோட்டலுக்குச்(தொலைவு:25கி.மீ.) செல்வதற்காக வாடகைக் கார் கட்டணத்தை விசாரித்தபோது, ஒரு லட்சம் ருப்பியா என்று சொன்னதைக் கேட்டவுடன் தலை சுற்றியது. இதெப்படி இவ்வளவு தொகையா? என்ற குழப்பத்துடன் யோசித்தபோது, திடீரெனத் தோன்றியது "இந்தியாவின் ஒரு ரூபாயும் இந்தோனேஷியாவின் 1869 ருப்பியாவும் சமமதிப்புடையன" என்று.

இந்தோனேஷியா நாட்டில் பணமதிப்பு படுபாதாளத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதற்குக் காரணத்தை யோசித்தபோது, ஜான் பெர்க்கின்ஸ் எழுதிய "ஒரு பொருளாதார அடியாளின் வாக்குமூலம் புத்தகம்" நினைவுக்கு வந்தது. சர்வதேச நிதி நிறுவனங்களின் தூண்டுதலினால் வளர்ச்சி என்ற பெயரில் பிரமாண்டமான பாலங்கள் கட்டுதல்,

பன்னாட்டு விமான நிலையம் நிறுவுதல் என வாங்கப்பட்ட கடன்களுக்காகத் திரும்பிச் செலுத்திய வட்டியில், இந்தோனேஷியா நாட்டின் பொருளாதாரம் திவாலாகி விட்டது என பெர்க்கின்ஸ் குறிப்பிட்டிருக்கிறார். ஆசிய ஆப்ரிக்க நாடுகளின் வளர்சிக்கு உதவுகிறோம் எனத் தொடங்கப்பட்ட சர்வதேச நிதி நிறுவனம் (IMF), உலக வங்கி போன்றவற்றுடன், டங்கல், காட் திட்டங்களும் இன்று உலக நாடுகளைப் புதிய காலனியாக மாற்றுவதில் முக்கியப் பங்காற்றுகின்றன. உலகமயமாக்கல் என்ற பெயரில் அறிமுகமாகியுள்ள ஆதிக்கச் செயல்பாட்டின் அரசியலை ஆராய்ந்திட வேண்டியுள்ளது. பொருளாதார ஆதிக்கம் மட்டுமின்றி, கலை இலக்கியத்திலும் உலகமயமாக்கலின் பருண்மையான விளைவுகள், குறிப்பிடத்தக்க அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

உலக அளவில் பயணம், வணிகம் என்பது பண்டைக்காலம் முதலாக வழக்கினில் உள்ளது. கி.பி.16-ஆம் நூற்றாண்டு தொடங்கி ஆசிய ஆப்ரிக்க நாடுகளைக் காலனிகளாக்கி ஐரோப்பியர் ஆட்சியதிகாரம் செய்ததின் பின்புலம் சந்தைப் பொருளாதாரம்தான்.

முதலாளித்துவத்தின் வளர்ச்சியில் உருவான ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கப் போட்டியினால் நடைபெற்ற இரு உலகப் போர்களினால் ஐரோப்பிய நாடுகள் கடுமையான பாதிப்பிற்குள்ளாயின. இரண்டு உலகப் போர்களிலும் நேரடியாகப் பங்கேற்காத அமெரிக்காவின் ஆயுத வியாபாரம் உச்சமடைந்தது.

இன்னொருபுறம் 1917-இல் சோவியத் யூனியனில் உருவான சோசலிச அரசாங்கம் ஏகாதிபத்தியவாதிகளுக்குப் பீதியைத் தந்தது. இரண்டாம் உலகப் போரினால் சிதலமாகிப்போன ஐரோப்பிய நாடுகள், சோசலிசப் பாதைக்குத் திரும்பிடாமல் இருப்பதற்காக 1944-இல் பிரெட்டனஸ் நகரில் நடைபெற்ற மாநாட்டில் உலக வங்கி (World Bank),சர்வதேச நிதி நிறுவனம்(International Monetary Fund) ஆகிய நிதியமைப்புகள் உருவாக்கப்பட்டன.

சோவியத் ரஷியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான பனிப்போர், உச்சமடைந்தபோது, மூன்றாம் உலக நாடுகளுக்கு உதவி செய்தல் என்ற பெயரில் சர்வதேச நிதி நிறுவனங்கள் முயன்றன. 1970-இல் அரேபியாவிலுள்ள எண்ணெய் வள நாடுகள் விலையை உயர்த்தியபோது, சர்வதேசரீதியில் பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டது. அப்போது தொடங்கி அமெரிக்கா, அரேபிய நாடுகளின் அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளில் தலையிட்டு, இன்றளவும் சிக்கல்களை உருவாக்குகிறது.

1989-இல் சோவியத் யூனியன் சிதைவுண்ட சூழலில், ஏகாதிபத்தியம் முந்தைய சோசலிச நாடுகளைக் கைப்பற்றியபோது, ''உலகமயமாதல்'' என்ற புதிய பெயர் சூட்டப்பட்டது. தடையற்ற வணிகக் கொள்கையைக்கொண்ட காட் (GATT) அமைப்பும் அதனுடன் இணைந்த டங்கல் திட்டமும்தான் அதிக எண்ணிக்கையில் அமெரிக்க

ஐரோப்பிய நிறுவனங்கள், உலகமெங்கும் ஆதிக்கம் செலுத்துவதற்குக் காரணம்.

உலகமயமாக்கல் என்ற பெயரில் தேசங்கடந்த கார்ப்பரேட் நிறுவனங்கள் இந்தியா உள்ளிட்ட பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளில் செயல்படுகிற தொழில்கள், நிதி, காப்பீடு, மருத்துவம், தகவல்தொடர்பு, போக்குவரத்து, விவசாயம் போன்றவற்றுடன் இயற்கையான கனிம வளங்களைக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கின்றன.

பங்குச் சந்தையில் செய்கிற சூழ்ச்சிகள்மூலம் உலக வணிக நிறுவனங்கள் பெரும் ஆதாயமடைகின்றன. அதேவேளையில் உள்நாட்டு நாணய மதிப்பும் பங்குச் சந்தையும் வீழ்ச்சியடைகின்றன. உலகச் சந்தையில் 70% இன்று G7 எனப்படுகிற வளர்ந்த நாடுகளின் ஆதிக்கத்தில் உள்ளன. இந்நிலைமையைத் தொடர்ந்து தக்கவைத்திட, நாகரிக உலகம் எனச் சில நாடுகளையும் அவற்றின் தலைவர்களையும் உருவாக்குகிற செயல் நடைபெறுகிறது.

அமெரிக்கா தலைமையிலான பயங்கரவாத எதிர்ப்பு அணி வெற்றி பெற்றிட, சர்வதேச சந்தைப் பொருளாதாரக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட வெண்டுமென்ற நிபந்தனை, வலியுறுத்தப்படுகிறது. வளைகுடா நாடுகளில் இஸ்லாமிய அடிப்படைவாதத்தைத் தூண்டுகிற அமெரிக்கா இன்னொருபுறம் தீவிரவாதத்தை எதிர்ப்பதாகப் பாவனை செய்து, உள்நாட்டில் தேசபக்தியைக் காட்டி, மக்களை மூளைச்சலவை செய்கிறது. இன்று உலகமெங்கும் நடைபெறுகிற கொடுங்கோன்மை, சர்வாதிகார ஆட்சியாளர்கள் உருவாவதற்குப் பின்புலமாக இருக்கிற அமெரிக்காவின் உலகமயமாக்கலுக்கு வலுவான அரசியல் நோக்கம் உள்ளது.

இந்தியா IMF நிறுவனத்திடமிருந்து 1981-இல் கடன் பெற்றது முதலாக உலகமயமாக்கலின் தாக்குதல் நேரடியாகத் தொடங்கியது. இதனால் சர்வதேச நிதி நிறுவனங்களின் நிபந்தனைகளுக்கு அடி பணிய வேண்டியதாயிற்று. 1985-இல் ராஜீவ் காந்தியால் அமல்படுத்தப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவுகளான, தனியார்மயமாதல், தாராளமயமாதல் போன்ற கொள்கைகள், அந்நிய நிறுவனங்கள் நுழைந்திட வழியேற்படுத்தின. எண்பதுகளில் இந்தியாவின் அந்நியச் செலவாணி குறைந்தபோது, ரூபாயின் மதிப்பும் சரிந்தது.

இதனால் ஏற்பட்ட கடன்சுமையினால், இந்தியா சர்வதேச நிதி நிறுவனத்திடமிருந்து ரூ. 3,200/- கோடி கடன் பெற்றது. இந்தக் கடன், உலகமயமாக்கல் என்ற விதை, கிளைத்து வளர்ந்து, அனைத்துத் துறைகளையும் தன் பிடிக்குள் வைத்துள்ளது. பிற நாடுகளின் வளங்களைச் சுரண்டுதல், அதிகாரம் செய்தல், மனித வளங்களைக் கொள்ளையடித்தல் என்ற ஏகாதிபத்திய அரசியலின் நவீன வடிவம்தான் உலகமயமாக்கல். வேளாண்மையை அடிப்படையாகக்கொண்ட இந்தியாவைத் தொழில்மயமாக்குதல் என்ற போர்வையின் கீழ் நுழையும் பன்னாட்டு நிறுவனங்கள், எல்லா

வழிகளிலும் சுரண்டுவதற்கான வழியாக உலகமயமாக்கல் பயன்படுகிறது. சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ற பெயரில் இந்தியாவில் உருவாக்கப்பட்டுள்ள பொருளாதார அமைப்புகள், கார்ப்பரேட்டுகளின் கொள்ளைக்கு வழி வகுப்பதாகும். இந்தியாவின் சேவைத்துறை நிறுவனங்களான கல்வி, மருத்துவம், வங்கி, காப்பீடு, போக்குவரத்து போன்றவற்றைத் தனியார்மயமாக்கும்போது, விளிம்புநிலையினரின் வாழ்க்கை இன்னும் பாதிப்பிற்குள்ளாகும்

உன்னதமான தொழில்நுட்பம், உயரிய தகவல்தொடர்பு, விரைவான போக்குவரத்து என வெளிப்படையாக முன்னிலைபடுத்தப்படுகிற உலகமயமாக்கல் புதிய பண்பாட்டுப் போக்குகளையும் அறிமுகம் செய்கிறது. மேலும் அது பொருளாதாரம் மட்டுமின்றி இலக்கியம், பண்பாடு, இயற்கை என அனைத்துத் தளங்களிலும் ஆளுகை செலுத்த முயலுகிறது. உலக மக்களை ஒற்றைக்கூரையின் கீழ் கொண்டுவர முயலுகிற உலகமயமாக்கல், நுகர்பொருள் பண்பாட்டினை வலியுறுத்துகிறது.

ஆடம்பரப் பொருட்களை அத்தியாவசியமானவை என்று உருவாக்கப்படுகிற பிரேமையினால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிப்பிற்குள்ளாகுகிறது. கார்ப்பரேட்டுகளுக்குச் சார்பாக உருவாக்கப்படும் புதிய பண்பாட்டுத் தளங்களினால், இரண்டாயிரமாண்டுப் பாரம்பரியமான தமிழ் மொழியும் தமிழர் பண்பாடும் சிதைவடையும். பழமையானது நடப்பினுக்குப் பொருத்தமற்றது, தேவையற்றது என உருவாக்கப்படுகிற கருத்தியல்கள், தனித்துவத்தை அழிக்கும் வல்லமையுடையன. காட்சி ஊடகங்கள் வம்புப் பேச்சுகளையும் கேளிக்கைகளையும் மட்டும் முன்னிலைப்படுத்தி, அரசியலற்ற தன்மையை உருவாக்குகின்றன. இணையகமும், தகவல்தொடர்பும் மனித மாண்புகளைச் சீரழிக்கிற போக்குகளுக்கு முன்னுரிமை தருவதன்மூலம் ஆடம்பர எண்ணங்களும், மேனாமினுக்கித்தனமும் சுயநலமும் எங்கும் பரவலாகியுள்ளன.

ஸ்மார்ட்போன்களின் திரைகளில் மூழ்குவதுடன் 24 மணிநேர Breaking News காண்கிறவர்களின் அசலான சுயசிந்தனை பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. உணவு, உடை, இருப்பிடம், ஆன்லைன் வணிகம் என எல்லாவற்றிலும் அந்நியச் சந்தையினால் ஈர்க்கப்படுகிற தலைமுறையினருக்குத் தமிழ் போன்ற மொழிகள்கூட அந்நியமாகத் தோன்றிட வாய்ப்புள்ளது. ஒருவனின் பிரக்ஞையிலிருந்து மொழி பற்றிய உணர்வை அகற்றிவிட்டால், பின்னர் கார்ப்பரேட்டுகளுக்குச் சாதமான உடல்களை உருவாக்குவது எளிதாகிவிடும்.

குறிப்பாகப் பெண்ணுடல்கள் முழுக்கப் போகப்பொருளாகிடும் வகையில் சந்தைக்கானதாக மாற்றப்படும். இதுவரை சமூகம் பல்லாண்டுகளாக உருவாக்கி வைத்திருக்கும் நல்விழுமியங்களை அழிப்பதன்மூலம் எல்லாம் சந்தைக்கானதாக மாற்றமடையும். சுருங்கச்சொன்னால் உலகமயமாக்கல் என்ற பதாகையின் பின்னால் அமெரிக்கமயம் ஆளுகை செலுத்தும். உடலால் இந்தியனாகவும் மனதினால்

அமெரிக்கனாகவும் வாழ்கின்ற உடல்களைத் தயாரிப்பதற்கு இலக்கியமும் பயன்படுத்தப்படுகிறது என்பது கசப்பான உண்மை.

உலகமயமாக்கல் என்ற சொல்லின் பின்னர் புதைந்திருக்கிற அரசியல் பற்றிய ஓர்மையுடன் செயல்படுகிற தமிழ்ப் படைப்பாளர்களின் படைப்பு முயற்சிகள் ஆறுதல் அளிக்கின்றன. இலக்கியம் என்பது உன்னதமானது அரசியலுக்கு அப்பாற்பட்டது மனதின் ஆழத்தைச் சித்திரிப்பது எவ்விதமான பிரச்சாரத்திற்கும் இடம் அளிக்காதது. தூய பளிங்கு போன்ற கருத்துகள் ஆளுகை செலுத்துகிற நவீனத் தமிழிலக்கியச் சூழலில் இளம் படைப்பாளிகள் மாறுபட்டுச் செயல்படுகின்றனர். புனைவிலக்கியத் தளத்தில் வாழ்க்கையைப் பதிவாக்கிட முயலுகிற நவீனப் படைப்பாளிகள் குடும்பம், கிராமம், காதல் எனக் குறுகிய வட்டத்திலிருந்து விலகித் தமிழரின் வாழ்க்கை இன்று எதிர்கொண்டுள்ள சவால்களைப் படைப்பாக்கிட முயலுகின்றனர்.

ஒவ்வொரு செயலுக்கும் பின்னால் அரசியல் பொதிந்துள்ளதை அவதானிக்கிற இன்றைய நாவலாசிரியர்களின் நாவல்கள் சமூக விமர்சனமாக வெளிப்பட்டுள்ளன. இன்று தமிழர்களின் வாழ்க்கையின் பிரச்சினைகளைப் படைப்பாக்கும்போது, உலகமயமாக்கல் பற்றிப் பதிவாக்குவது தவிர்க்கவியலாதது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் சென்னையில் அந்நிய முதலீட்டாளர்களைக் கவர்ந்திழுப்பதற்காக அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவின் தலைமையில் பிரமாண்டமான மாநாடு நடத்தப்பட்டது.

அப்பொழுது 1,64,000 கோடி மூலதனம் தமிழகத்தில் முதலீட்டாளர்கள் கொண்டுவந்து கொட்டப்போவதாக அரசாங்கம் "கப்சா" விட்டது. அந்த நிகழ்வின்போது ஹாலோகிராமில் உருவான மின்னணுக் குதிரை காற்றில் மிதந்துவந்து ஜெயலலிதாவின் முன்னால் மண்டியிட்டது எதனுடைய குறியீடு? உலகமெங்கும் இருந்து அழைக்கப்பட்டிருந்த தொழில் முனைவர்களுக்குச் செலவழிக்கப்பட்ட பல கோடிப் பணம் வீண்விரயம் என்பதைத்தவிர அந்த மாநாட்டினால் பயன் எதுவுமில்லை.

வெளிநாட்டு முதலீட்டாளருக்கு வெற்றிலை பாக்கு வைத்துத் தொழில் தொடங்க அழைப்பு விடுத்தும் ஏன் பலரும் முன்வரவில்லை. யோசிக்க வேண்டியுள்ளது. இந்த இடத்தில் சரவணன் சந்திரனின் ஐந்து முதலைகள் நாவல் நினைவுக்கு வருகிறது. காட்சி ஊடகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த சரவணன் திடீரென சர்வதேசப் பின்புலத்தில் நவீன அரசியலை நாவலாக எழுதியுள்ளார்.

நாவலின் கதைசொல்லி, தமிழகத்திலிருந்து தெற்காசியாவிலுள்ள தைமூர் நாட்டில் தொழில் தொடங்கி அந்த நாட்டின் வளத்தைச் சுரண்டலாம் எனச் செல்கிறார். தைமூர் அடிப்படையில் பொருளாதாரரீதியில் வளமற்ற நாடு. ஆனால் அந்த நாட்டில் இயறகை வளங்கள் கொட்டிக்கிடக்கின்றன என இரையை விழுங்கிட அலைகிற முதலைகளாக

முதலீட்டாளர்கள் குவிகின்றனர். வணிகம் என்ற பெயரில் எவ்விதமான நியாயங்களும் இல்லாமல் கொடூரமான செயல்கள் நிகழ்த்தப்படுகின்றன. துரோகம் என்பது இயல்பானதாகக் கருதப்படுகிற சூழலில், எப்படியாவது பணத்தைக் கைப்பற்றிட முதலைகள் துடிக்கின்றன. "மூலதனக் கொடுங்கோன்மை" எனப் பொதுவுடைமை ஆசான் மார்க்ஸ் சொன்னது அப்படியே பொருந்துகிறது. தைமூரில் டாலர் நோட்டுத்தான் செல்லுபடியாகிற பொருளாதாரச் சூழலில், பூர்விக மக்கள் அன்றாட உணவுக்காக எதையும் இழக்கின்றனர். கதைசொல்லி தைமூரில் ஏற்கனவே இருக்கிற தொழில் முனைவர்களுடன் கூட்டுச்சேர்ந்து செய்கிற ஒவ்வொரு முயற்சியிலும் தடங்கல் ஏற்படுகிறது.

கடல் அட்டைகள், கா.ஃபி லூவாக், கூட்டு உழவாரன் பறவைக் கூடு எனத் தேடியலைகிற நிலையில், எதையாவது செய்து எப்படியாவது பொருளீட்ட முயலுவதில் நெறிமுறை எதுவும் இல்லை. தொழில் முதலீடு என விரிந்திடும் சாம்ராஜ்யத்தில் சகமனிதர்களுடனான உறவென்பது நம்பிக்கைத் துரோகம், கசப்பு, வஞ்சகம், கொண்டாட்டம், காமம், வெறுப்பு என விரிந்திடும் சூழலில், எங்கும் முதலைகள் வாயைப் பிளக்கின்றன.

அவற்றின் வாய்களில் வைரச் சுரங்கங்களும் எண்ணெய்க் கிணறுகளும். காதல், குடும்ப உறவு எனக் கதைசொல்கிற வழமையான தமிழிலக்கியச் சூழலில், சரவணனின் நாவல் களம் மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, தைமூர் எனப் பரந்திருப்பது வாசிப்பில் சுவராசியமளிக்கிறது. தமிழ்நாட்டில் மணல் மாபியாக்களின் சாம்ராஜ்யம் எப்படி எல்லா மட்டங்களிலும் ஊடுருவியுள்ளது பற்றிய கதைசொல்லல், அண்மைக்காலத் தமிழக அரசியலுடன் நாவலைப் பொருத்துகிறது. பணத்தை எந்த வழியிலும் சம்பாதிக்கத் துடிக்கிற முதலீட்டாளர்கள் பற்றிய சரவணனின் சித்திரிப்புகள், உலகமயமாக்கல் எப்படியெல்லாம் தனது ஆக்டோபஸ் கரங்களை விரித்து எல்லாவற்றையும் விழுங்கிடத் துடிப்பதைச் செறிவுடன் விவரிக்கின்றன.

இதுவரை சமூகம் பன்னெடுங்காலமாக உருவாக்கியுள்ள மதிப்பீடுகளின் வீழ்ச்சியை நாவல் நுட்பமாகப் பதிவாக்கியுள்ளது. பணத்தை முன்வைத்த வாழ்க்கையில் துரோகமும் நட்பும் ஒரே வரிசையில் நிற்கின்றன. இக்கு யார் வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் துரோகி அல்லது நண்பனாக மாறுவதற்கான எல்லாவிதமான சாத்தியப்பாடுகளும் இருப்பதை நாவலின் மையம் உணர்த்துகிறது. உலகமயமாக்கல் பண்பாட்டுத் தளத்தில் எத்தகைய மனித மதிப்பீடுகளை உருவாக்கும் என்பதை அறிந்திட ஐந்து முதலைகளின் கதை நாவல் முக்கியமான ஆவணம்.

எல்லோரும் முதலைகளாக மாறிப் பேராசையில் தவிக்கும்போது, பெரிய முதலைகளின் சர்வதேசக் கொள்ளை வியாபாரம் சூடு பிடிக்கும். உலகமயமாக்கல் என்ற சொல்லுக்குப் பின்னால் பொதிந்திருக்கிற அரசியல், கொள்ளை, பண்பாட்டுச் சீரழிவு குறித்த பேச்சுகளை உருவாக்குகிற ஐந்து முதலைகளின் கதை, தமிழில் வெளியாகியுள்ள

முதல் சர்வதேச அரசியல் நாவல். விநாயகமுருகனின் ராஜீவ் காந்தி சாலை நாவல், உலகமயமாக்கலினால் மாறிவரும் சென்னை மாநகரப் பின்புலத்தில் விரிந்துள்ளது. தகவல்தொடர்பின் பிரமாண்டமான முன்னேற்றதைக் குறித்து நாவல் எழுப்புகிற கேள்விகள் முக்கியமானவை.

பன்னாட்டுத் தகவல்தொடர்புக் கம்பெனிகளின் வருகையினால் செம்மஞ்சேரி, பள்ளிக்கரணை, சோழிங்கநல்லூர் போன்ற பாரம்பரியமான கிராமங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ராஜீவ்காந்தி சாலை நாவல், பதிவாக்கியுள்ளது. கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர்கூட எளிய கிராமிய வாழ்க்கை நிலவிய நிலப்பகுதியில் இன்று ஆறு வழிப்பாதைகளில் ஆடம்பரமான கார்கள் விரைகின்றன.

பெரிய வணிக வளாகங்கள், நட்சத்திர விடுதிகள், இறக்குமதியான கார்கள், அழகான இளைஞர்களும் இளைஞிகளும் எனச் சூழலே மாறியுள்ளது.. ரியல் எஸ்டேட்காரர்கள் சிறிய நிலவுடைமையாளர்களைத் தந்திரமாக ஏமாற்றிக் கைப்பற்றிய விவசாய நிலத்தின்மூலம் கோடீஸ்வரர்களாக ஆகின்றனர்.

முன்னொரு காலத்தில் தங்களுக்குச் சொந்தமாக இருந்த நிலத்தில் இன்று விரைத்து நிற்கும் அடுக்குமாடிக் கட்டடத்தினைத் தள்ளி நின்று ஏக்கத்துடன் பார்க்கின்ற கிராமத்தினரின் நடப்பு வாழ்க்கை, துயரம் தோய்ந்துள்ளது. குடும்ப உறவுகளின் சிதைவில் மனித மதிப்பீடுகள் சிதலமடைகின்றன.

நுனி நாக்கில் ஆங்கிலம் பேசிக்கொண்டு சாப்ட்வேர் கம்பெனிகளில் பணியாற்றும் இளைஞர்களும் உற்சாகமாக இல்லை. எப்பவும் வேலையிலிருந்து நீக்கப்படலாம் என்ற பதற்றத்துடன் பணியாற்றுகிறவர்களைப் பயம் நிழலாகத் தொடர்கிறது. நிறுவனங்களில் பணம், அதிகாரப் போட்டிக்காக நடைபெறும் சம்பவங்களினால் அலுவலர்களின் மனஅமைதி சிதலமாகிறது. அழகிய இளம்பெண்கள், காதல், குடும்பம் என வாழும் இளைஞர்கள் ஆடம்பரமாக வாழ முயலுகின்றனர்.

வரவுக்கு மீறிய செலவு, நுகர்பொருள் மீதான கவர்ச்சி பலரையும் பாடாய்ப்படுத்துகிறது. பத்தாண்டுப் பணிக்காலத்திலே முப்பதாண்டு முதுமையை ஏற்படுத்தும் மென்பொருள் கம்பெனியின் வேலைப்பளு பற்றி அழுத்தமான கருத்துகளை விநாயகமுருகன் முன்வைத்துள்ளார். மனப்பிறழ்வடைந்து சாலையில் சுற்றித் திரிவோர், உயரமான கட்டடதில் இருந்து குதித்துத் தற்கொலை செய்கிறவர்கள் என நாவல், வாழ்வின் இருண்ட பக்கங்களை விவரித்துள்ளது. ராஜீவ்காந்தி சாலையில் விரைந்திடும் வாகனங்கள் ஒருபுறம் எனில் வீட்டைவிட்டுத் துரத்தப்படும் மனப்பிறழ்வினர் இன்னொருபுறம். விரையும் வாகனங்களின் டயர்களில் சிக்கி மரணமடையும் எளிய மனிதர்களின் துயரம் அளவற்றது. எல்லாவற்றிலும் அவசரம் என வேகம்வேகமாக தேடி அலையும் மனிதர்கள் மனப்பிறழ்வடைவது இயல்பாக நடைபெறலாம் என நாவலாசிரியர் எச்சரிக்கிறார். நகரத்தின் பிரமாண்டமான வளர்ச்சி குறித்து மகிழ்ச்சி கொள்ளவியலாமல், சூழலின்

அபத்தம், வெறுமை குறித்துக் காத்திரமான சம்பவங்களை நாவல் முன்வைத்துள்ளது. மனித இருப்பில் ஒவ்வொரு கணமும் பொங்கி வழியும் கசப்பின் வழியே, மனித இருப்புக் குறித்துத் தோன்றும் கேள்விகள் முக்கியமானவை. சென்னை மாநகரத்தின் பிரமாண்டமான வளர்ச்சிக்குப் பின்னால் ஒவ்வொரு காலகட்டத்திலும் நிகழ்கிற இழப்புகள் தவிர்க்கவியலாதவை. தினமும் ஆயிரக்கணக்கில் சென்னைக்கு வரும் மக்களின் வாழ்க்கைக்கு உத்திரவாதம் எதுவும் உள்ளதா? யோசிக்க வேண்டியுள்ளது.

இத்தகு சூழலில், உலகமயமாக்கலின் துணை விளைவான நகரமயமாதல் காரணமாக அவதிப்படுகிற பூர்வீகக் குடிகளையும், ஐ.டி. நிறுவனங்களின் பணியாற்றுகிறவர்களின் மகிழ்ச்சியற்ற வாழ்க்கையைச் சித்திரித்துள்ள ராஜீவ்காந்தி சாலை நாவல், சமகாலத்தின் அரசியல் பதிவாகும்.

மாற்றம், முன்னேற்றம், வளர்ச்சி என கார்ப்பரேட்டுகள் முன்வைக்கிற கருத்தியலுக்குப் பின்னர் எல்லாவிதமான தார்மீக மதிப்பீடுகளும் அர்த்தமிழக்கின்றன. நுகர்பொருள் பண்பாட்டின் மேலாதிக்கம் காரணமாக தேவையற்ற பொருட்களையும் வாங்கிக் குவிக்கிற மனநிலை, மனிதர்களின் தன்னிலையை மறுக்கிறது. எதையாவது தயாரித்துவிட்டு, அது முக்கியமானது என்ற பிரேமையைக் காட்சி ஊடகங்களின் மூலம் ஏற்படுத்தி, அதற்குப் பின்னர் ஓட வைக்கிற செயலின் பின்புலத்தில் உலகமயமாக்கல் இருக்கிறது. பொருளியல் சுரண்டலை நியாயப்படுத்திடப் பண்பாட்டுத் தளத்திலும் நுண்ணிய மாற்றங்களைச் செய்திடும் செயல் தொடர்கிறது.

உலகமயமாக்கலின் செல்லமான ஐ.டி.தொழில் மீதான கவர்ச்சியினால் ஈர்க்கப்படுகிற இளைஞர்கள் எதிர்கொள்கிற பிரச்சினைகள் தனியானவை. வெளியே இருந்து பார்ர்க்கும்போது தெரிகிற பிரமாண்டமான குளிரூட்டப்பட்ட கட்டடங்களின் உள்ளே வேலையை முன்வைத்து நவீனக் கொத்தடிமைகளான சா.்.ப்ட்வேர்காரர்கள் படுகிற பாடுகள் பற்றிய செல்லமுத்து குப்புசாமியின் இரவல் காதலி நாவல், ஆழமான பதிவாகும். இன்று மென்பொருள் நிறுவனங்கள் சமூக வளர்ச்சியில் முக்கிய இடம் வகிப்பதான நம்பிக்கை நிலவுகிறது. அதைக் கேள்விக்குள்ளாக்குகிறார் செல்லமுத்து. "ஐடி துறையே சும்மா வெத்து வேட்டு.

மேற்பரப்புக்குக் கீழே பார்த்தால் ஒரே ஹாலோவா இருக்கு. அவுட்சோர்ஸ் எனபடும் அடிமாட்டு வேலையைத் தானே செய்கிறீர்கள்?. அமைச்சர் கூட்டத்துக்கு ஆள் சேர்க்கும் லோக்கல் அரசியல்வாதி மாதிரி அமெரிக்காக்காரன் சொல்றதைச் செய்யறீங்க.

டாப்-3, இல்லை டாப்-5 இண்டியன் ஐடி கம்பெனியை எடுத்துக்குங்க எல்லாம் என்ன செய்யுறாங்க? அமெரிக்க அண்ட் ஐரோப்பா கார்ப்பரேட் கஸ்டமர்ஸ்க்குக் கூலி வேலைதானே செய்யறீங்க? உங்களுக்குனு சொந்தமா ஏதாவது புராடெகட் இருக்கா? இல்லை பிராண்ட்தான் இருக்கா?". இயல்பாகவே வேகமாக இயங்குகிற திறமைசாலிகளான இளைஞர்களைக் கசக்கிப் பிழிந்து சக்கையாகத் துப்புகிற சூழலுக்குக்

காரணம் அமெரிக்கா உள்ளிட்ட மேலைநாடுகள்தான். எட்டு மணி நேர வேலை, பணிப் பாதுகாப்பு, உழைப்பிற்கேற்ற ஊதியம் எனப் போராடிப் பெற்ற உரிமைகளை ஐடி கம்பெனிகள் பொருட்படுத்துவது இல்லை.

மேலிருந்து சொல்வதைக் கேட்டு, இம்மி பிசகாமல் செய்து முடிக்கிற படித்த மந்தைக் கூட்டம்தான் இன்று தேவைப்படுகிறது. சுயசிந்தனையில்லாமல், பொருளாதாரரீதியில் தற்சார்பு இல்லாத கூட்டத்தினரான அலுவலர்களின் மன உளைச்சலும் வெறுமையும் பொங்கி வழிகிற சூழலை நாவல் பதிவாக்கியுள்ளது.

வேலையே முதன்மையானது என நினைக்கிற ஐடி அலுவலரின் குடும்ப வாழ்க்கைச் சிதைவடைவது, தற்செயலானது அல்ல. சா/ப்ட்வேர் துறையில் கொழுத்த ஊதியம் என்ற என்ற பிம்பம் உருவாக்குகிற மனநிலையின் இன்னொரு முகத்தைச் செல்லமுத்துவின் நாவல் கேள்விக்குள்ளாகியுள்ளது. சமூகமாக வாழ்கிற மனிதர்களுக்காக உருவாக்கப்பட்ட வேலை, ஒருநிலையில் எல்லாவற்றையும் ஆட்டிப்படைக்கிற மாயசக்தியாக வடிவெடுக்கும்போது, மனித இருப்புக் கையறுநிலையில் முடங்குகிறது.

உலகம் என்பது இன்று பூகோளக்கிராமமாகச் சுருங்கி விட்டது எனத் தகவல்தொழில்நுட்பம் கொண்டாடப்படுகிறது. வளர்ச்சியடைகிற நாடுகளைத் தங்களுடைய கட்டுக்குள் கொண்டுவருகிற அமெரிக்கா உள்ளிட்ட மேலைநாடுகளின் தந்திரம் அதில் பொதிண்டுள்ளது. உலகமயமாக்கல் காலகட்டத்தில் வளர்ச்சியா அல்லது வீக்கமா என அறிந்திடாத இளைஞர்கள் பொறியியல் கல்வி பயின்று பணம் கொட்டுகிற கற்பகத்தருவைக் கைப்பற்றிடத் துடிக்கின்றனர்.

யதார்த்தச் சூழலோ கசப்பாக இருக்கிறது. 2007-இல் அமெரிக்காவில் திடீரென ஏற்பட்ட பொருளாதாரத் தேக்கம், இந்தியாவில் சௌகரியமாக வாழ்ந்துகொண்டிருப்பதாக நம்பிய நடுத்தர வர்க்கத்தினரின் வாழ்க்கையைச் சிதைத்தது. தகவல் தொழில்நுட்பத்துறையில் ஆயிரமாயிரம் கனவுகளுடன் மிதந்தவர்கள், மாபெரும் வீழ்ச்சியை எதிர்கொண்டனர். அமெரிக்க வங்கிகள் திவாலானது முதலாக ஏற்பட்ட பொருளாதாரச் சரிவானது இந்தியாவில் எட்டு சதவீதப் பொருளாதாரம் சரிந்தது.

இதனால் ஏற்பட்ட ஐடி துறையினருக்கு ஏற்பட்ட வலிகளும் துயரங்களும் பற்றி ஆர்.வெங்கடேஷ் எழுதிய இடைவேளை நாவல் குறிப்பிடத்தக்க சமூகப் பதிவாகும். படைப்பாளி தன்னைச் சுற்றிலும் நடக்கிற முக்கியமான சம்பவங்கள் குறித்து எதிர்வினையாற்றுவது அவசியம் என்ற நிலையில் வெங்கடேஷ் பல்வேறு கதைமாந்தர்கள் மூலம் நிரம்பக் கதைகளைச் சொல்கிறார். கணிசமான சம்பளம், வசதியான குடும்பம் என இருக்கிற ஆர்த்தி அமல்தாஸ், கல்யாணராமன், ரஞ்சன் ஆகிய மூவரையும் பணியிலிருந்து ஒரே நாளில் சிக்கன நடவடிக்கையாகக் கம்பெனி நீக்குகிறது.

இதுவரை மனரீதியில் கட்டமைக்கப்பட்டிருந்த கோட்டை சிதறுகிறது. அடுத்து

என்ன செய்வது என்ற கேள்வி உருவாக்கிடும் மனப்பதற்றம், நம்பிக்கையின்மை, விரக்தி எனத் தவிக்கிறவர்களின் கதைகளை உருக்கமாகச் சொல்லியுள்ள இடைவேளை நாவல், உலகமயமாக்கலின் விளைவுகளை புதிய கோணத்தில் அணுகியுள்ளது.

"சென்னைக்கு மிக அருகில்" எனக் கதைக்கிற விநாயகமுருகனின் நாவல், நிலத்தை முன்வைத்து உலகமயமாக்கலின் இன்னொரு விளைவைப் பதிவாக்கியுள்ளது. விவசாயத்தை அடிப்படையாகக்கொண்ட தமிழக நிலப்பரப்பில், வளமான மருத நிலங்கள் பிளாட்டுகளாக்கப்பட்டு விற்கப்படுவதன் பின்னர் உள்ள அரசியல் வலுவானது. எண்பதுகளில்கூடச் சென்னையின் எல்லையாகக் கருதப்பட்ட தாம்பரம் இன்று நகரின் மையமாகி விட்டது.

நகரத்தை நோக்கிப் புலம்பெயர்ந்திடும் மக்களின் எண்ணிக்கை மெல்லப் பெருகியது. இந்நிலையில் உலகமயமாக்கலுக்குப் பின்னர் சென்னையில் உருவான வாகனத் தொழிற்சாலைகள், ஐடி கம்பெனிகளின் பெருவெடிப்புப் போன்ற சுழல், காஞ்சிபுரம் மாவட்டத்தையும் உள்ளடக்கியதாக மாற்றியது. தானியங்களை விளைவிக்கிற நிலத்தின் மதிப்பு தாறுமாறாகக் கூடியது.

மணிமங்கலம், செம்மஞ்சேரி போன்ற பாரம்பரியமான கிராமங்களின் வயல்வெளியானது பிளாட்டுகளாக மாற்றப்பட்டபோது, அங்கு வாழ்ந்த கிராமத்தினரின் பண்பாட்டு வாழ்க்கை எப்படியெல்லாம் சிதைவடைகிறது என்பது சென்னைக்கு மிக அருகில் நாவலாகியுள்ளது. உயர்ந்த கட்டடங்கள் ஒருபுறம் என்றால், புதிதாக உருவாகும் நகர்களில் கட்டப்படுகிற வீடுகள் இன்னொருபுறமும் என வாழ்க்கை மாற்றத்திற்குள்ளாகிறது.

சமகாலச் சம்பவங்களைப் பகடியான மொழியில் விவரிக்கிற விநாயகமுருகனின் கதைசொல்லல் முடிவற்ற கதைகளால் நிரம்பி வழிகிறது. நிலத்தை முன்வைத்து நடைபெறுகிற போராட்டங்களும் சூழ்ச்சிகளும் கபடுகளும் நிரம்பிய சூழலில் தனிமனித ஒழுங்கு அர்த்தம் இழக்கிறது. ஐடி கம்பெனிகள் உள்ளிட்ட தொழில் நிறுவனங்களால் ஈர்க்கப்பட்டவர்களின் கனவான சென்னையில் சொந்த வீடு ஏற்படுத்துகிற விளைவுகளை முன்வைத்து எழுதப்பட்டுள்ள சென்னைக்கு மிக அருகில் நாவல் எழுப்புகிற கேள்விகள் நுண்ணரசியலைக் கட்டமைத்துள்ளன.

உலகமயமாக்கல், பன்னெடுங்காலமாக மக்களிடையே நிலவுகிற சமூக விழுமியங்களைச் சிதலமாக்கியுள்ளது. இந்நிலையில் ஒருவகையான சோர்வும் அவநம்பிக்கையும் விரக்தியும், சலிப்பும் எங்கும் பற்றிப் படர்கின்றன. காட்சி ஊடகங்கள் மாற்றாக முன்வைக்கிற கொண்டாட்டங்களும் மதுக்கூடங்களும் ஏற்கனவே இருக்கிற மதங்களும் போதுமானதாக இல்லை. எதையாவது சார்ந்து வாழ வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. இன்று நுகர்பொருள் பண்பாடு மேலோங்கியுள்ள நிலையில் வாங்கு, பயன்படுத்து, ரசனையை மாற்று, தூக்கி எறி என்பது தாரக மந்திரமாக ஒலிக்கும்போது மதம்

எடுபடுமா? பயணம் நாவலின் மூலம் மதத்தை முன்வைத்து அரவிந்தன் சித்திரிக்கிற சம்பவங்கள் உலகமயமாக்கல் ஏற்படுத்தியுள்ள நெருக்கடியின் வெளிப்பாடுகள்தான். கார்ப்பரேட் சாமியார்கள் நவீன ஆசிரமங்கள் மூலம் உருவாக்குகிற அமைதி, கேள்விகளுக்கு அப்பாற்பட்டதா? கார்ப்பரேட் சாமியார்களின் பேச்சைக் கேட்கவும் அருளாசி பெறவும் கூடுகிற மக்கள்திரளின் மந்தை மனோபாவம் முக்கியமானது. ஆசையே அனைத்துத் துயரங்களுக்கும் மூலகாரணம் என்ற பண்டைய கருத்தியல் மாறி விட்டது. எல்லாவற்றுக்கும் ஆசைப்படு, உன்னால் முடியும் என கார்ப்பரேட் சாமியார்கள் முழங்குகின்றனர்.

எதையும் அடைய முடியும் என்ற போலியான நம்பிக்கையை விதைப்பதன்மூலம் தன்னை நாடி வருகின்றவர்களுக்குத் தற்காலிகமான அமைதியைத் தருகின்றனர். விரும்பியவற்றை அனுபவித்துவிட்டுக் கடந்து செல்க என மனரீதியில் தரும் அறிவுரை, நுகர்பொருள் பண்பாட்டின் இன்னொரு வடிவம்.

இருப்பினை நியாயப்படுத்தும் நிலையில், பண்டைய புராண இதிகாசங்கள், பகவத்கீதை போன்றவற்றை மறுவியாக்கியானம் செய்கிற சாமியார்களின் பேச்சை முன்வரிசையில் இருந்து கேட்பதற்கு ஆயிரக்கணக்கில் பணம் செலுத்த வேண்டியுள்ளது.

யோகாசன முகாம்களுக்குப் பணம் செலுத்தினால்தான் உள்ளே நுழையவே முடியும். பெரும் தொழிலதிபர்களின் தயவினால் இயங்குகின்ற கார்ப்பரேட் சாமியார்கள், பத்தாண்டுகளில் ஊடகங்களின் உதவியுடன் மகான் நிலைக்கு உயர்கின்றார். அவர்களைப் பற்றிய ஒளிவட்டம் ஊதிப் பெருக்கப்படுகிறது் கையை ஆட்டினாலோ, தலையை அசைத்தாலோ, எல்லாம் புனிதமாகக் கருதப்படுகிறது சாதாரணமாகப் பேசுவதுகூட, ஞானமாகப் போற்றப்படுகிறது.

இத்தகைய கார்ப்பரேட் சாமியார்கள் உருவாவது பற்றிய சித்திரிப்பு, பயணம் நாவலில் நுட்பமாகப் பதிவாகியுள்ளது. இருப்பினில் இருந்து அந்நியப்படுகிற சூழலில், மீண்டும் நம்பிக்கையுடன் வாழ்தலைப் போதிக்கிற கார்ப்பரேட் சாமியார்களும் உலகமயமாக்கலின் அம்சம்தான்.

ஏற்றுமதியே லட்சியம், டாலர்தான் வழிபாட்டுப் பிம்பம் என உருவான திருப்பூர் நகரத்தில் நிட்டிங் கம்பெனிகளின் அசுர வளர்ச்சி, சாயப்பட்டறைகள், எங்கும் தாராளமாகப் புழங்கிடும் பணம் என்ற சூழலில் மனித வாழ்க்கை மாறுவதை எம்.கோபாலகிருஷ்ணனின் மணல் கடிகை நாவல் பதிவாக்கியுள்ளது. நிலம் சாயக்கழிவினால் நாசப்பட்டால் என்னவென்று யோசிக்காமல் உருவாக்கப்படுகிற டாலர் சிட்டியின் வளர்ச்சியின் பாதிப்புகள் அளவற்றவை. வேதியியல் கலந்த நீரால் ஒரத்துப்பாளையம் அணையும் நொய்யல் ஆறும் மாசடைந்து விட்டன.

கிராமத்தில் விவசாயம் சிதலமான சூழலில் திருப்பூர் கம்பெனிகளை நோக்கி வீசப்படுகிற கிராமத்தினரின் மதிப்பீடுகளும் சீரழிவடைகின்றன. நுகர்பொருள் உற்பத்திக்கான சந்தைக்காக ஓட்டத்தில் எப்பொழுதும் பரபரப்புடன் வாழ வேண்டிய நிலை. நிட்டிங் கம்பெனியில் வேலைக்குப் போகிற பெண்கள், சரக்கு டெலிவரிக்காக இரவிலும் பணியாற்றுகிற நெருக்கடி. வேலைப்பளு ஏற்படுத்துகிற மனச்சோர்விலிருந்து விடுபட முயலுகிற பெண்களுக்குக் குடும்பத்திற்கு வெளியிலான பாலுறவு ஆறுதலாக உள்ளது. விளிம்புநிலையினரின் அன்றாட வாழ்க்கையில் உலகமயமாக்கலின் விளைவுகள் ஆழமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

திருப்பூர் வட்டாரத்தில் தறி கொடவுன் வேலை, நசிந்துபோன விவசாயம், தண்ணீர் பற்றாக்குறை, கோட்டர் மதுவில் மூழ்கும் ஆண்கள் எனத் தொடர்ந்து எழுதுகிற வா.மு.கோமுவின் கதைசொல்லல், உலகமயமாக்கலின் விளைவுகள்தான். குறிப்பாக ஆண்-பெண் உறவு இன்று எப்படியெல்லாம் மாறியுள்ளது, என்ற விவரிப்பு, வாசிப்பில் அதிர்ச்சியைத் தருகிறது.

கொங்கு வட்டாரத்தின் மண்ணுக்குரிய மதிப்பிடுகளின் வீழ்ச்சியானது கோமுவின் நாவல்களில் அழுத்தமாக வெளிப்படுகிறது. கள்ளி, மங்கலத்து தேவதைகள், நாயுருவி போன்ற கோமுவின் நாவல்கள் பாலியலை முன்வைத்து உருவாக்குகிற பேச்சுகள், ரகசியப் பிரதிகள் என்ற நிலையில் இருந்து விலகி, தமிழ்ப் பாரம்பரியம், பண்பாடு குறித்த கேள்விகளை எழுப்புகின்றன.

நவீன வாழ்க்கையின் விளைவான பிளவுண்ட மனிதர்கள், லட்சியம் எதுவுமற்ற நிலையில் காற்றில் மிதந்தலைகின்றனர். நுகர்பொருள் பண்பாட்டின் ஆதிக்கத்தில் கிராமத்தையும் நகரத்தையும் தொலைத்தவர்களின் வாழ்க்கை இப்படியெல்லாம் இருக்கிறது என்று கோமு சொல்கிற கதைகள், சீரழிந்து கொண்டிருக்கிற தமிழர் வாழ்க்கையின் இன்னொருமுகம்.

லக்ஷ்மி சரவணக்குமாரின் உப்பு நாய்கள் நாவல், சென்னை நகரை மையமிட்டுச் சூழலின் பேரவலத்தைப் பேசுகிறது. நாளும் பலூன் போல ஊதிப் பெருகிடும் நகரம் வீங்கியுள்ளது. நுகர்பொருளின் அளவுக்கதிகமான தேவை பலரையும் ஆட்டிப் படைக்கிறது. பணத்திற்காக எதையும் செய்கிற நிழலுலக மனிதர்கள், மாபியாக்கள் நகரமெங்கும் வலைப்பின்னல்களாகப் படந்துள்ளனர்.

அமெரிக்க பாணியிலான உணவு, உடை, வாழ்க்கைமுறையில் வாழ்ந்திடச் ஷாப்பிங் மால்களும், கே.ஃப்சிகளும் மெரி பிர.ஃவுன்களும் பிரதானச் சாலைகளில் காத்திருக்கின்றன. இன்னொருபுறம் தகர ஷெட்களில் வாழ்கிற வட இந்தியர்கள். நாளை மற்றுமொரு நாளே என வாழ்ந்திட நிர்பந்திக்கப்பட்டவர்களின் கதைகளின் பின்புலத்திலும் உலகமயமாக்கலின் பாதிப்புகள் உள்ளன. உலகமயமாக்கல், எப்படியெல்லாம் இயற்கையை நாசமாக்குகிறது என்பதை மலேசியா காடுகள் வெட்டி அழிக்கப்படுவதன் பின்புலத்தில்

நக்கீரன் எழுதியுள்ள காடோடி நாவல் சூழலியல் நோக்கில் முக்கியமானதாகும். நாவலின் கதைக்களன் மலேசியா என்றாலும், மேற்கு தொடர்ச்சி மலையின் காடுகளை வெட்டி அழித்ததுடன் பொருத்திக் காணலாம். உலகமயமாக்கல் மூன்றாம் உலக நாடுகளின் கனிம வளங்கள், காட்டு வளங்கள், நீர் வளங்கள் என எல்லாவறையும் கார்ப்பரேட்டுகள் கொள்ளையடிப்பதற்கு வழி வகுக்கிறது என்ற புரிதலை நாவல் ஏற்படுத்துகிறது.

சரவணன் சந்திரனின் ரோலக்ஸ் வாட்ச், அஜ்வா ஆகிய இரு நாவல்களும் இளைஞர்களின் உலகம் என்னவாக இருக்கிறது என்ற தேடுதலை முன்வைக்கின்றன. உலகமயமாக்கல் சூழலில் இருப்பு குறித்த அவநம்பிக்கை, அடையாளமற்ற நிலை, குடும்ப உறவுகள் மீது அக்கறையின்மை, அந்தரங்கம் இல்லாத நிலை எனத் தன்னையே கண்டறிய முயலுகிற இளைய தலைமுறையினரின் கதைகள் நாவலாகியுள்ளன. போதைப் பொருளுக்கு அடிமைப்படுகிறவர்கள், போதையின் வழியாக இருப்பினைக் கடந்து செல்ல முயலுவது அஜ்வா நாவலின் மையம். சுயமுன்னேற்றம், தன்முனைப்பு, வேகம், உச்சம், சுயநலம் சார்ந்து உருவாக்கப்படுகிற இளைஞர்களின் கல்வி போதனையானது, அடிப்படையில் பிராய்லர் சிக்கன்களை உருவாக்குவது போன்றது. நகரத்தில் முதல் தரமான கல்வி எனத் தொடங்குகிறவர்களின் வாழ்க்கையின் உச்சம் அமெரிக்க சிலிக்கான் பள்ளத்தாக்கில் வேலை செய்வதுதான். மரபு சார்ந்த எல்லவிதமான அடையாளங்களையும் துறக்கிற இளைஞர்களின் நவீன உலகமும் ஒருவகையில் நுகர்பொருள் பண்டமாகிறது. ரோலக்ஸ் வாட்சில் பொதுவாக டூப்ளிகேட் தயாரிப்பது இல்லை. அப்படியே இருந்தாலும் அசலுக்கும் போலிக்கும் வித்தியாசத்தைக் கண்டுபிடிப்பது சிரமம். நாவலில் வரும் சரவணன் நல்லவனா? கெட்டவனா?என்பதைக் கண்டறிய முடியாது. சரவணன் போன்ற பாத்திர உருவாக்கப் பின்புலத்தில் அடையாளத்தைத் தொலைத்த உலகு தழுவிய மனிதன் இருக்கிறான். நல்லதுக்கும் கெட்டதுக்குமான மெல்லிய இடைவெளியைக் கடக்கிறவன் பற்றிய விவரிப்பு, முக்கியமானது. அஜ்வா நாவல் போதையில் தன்னை இழக்கிற இளைஞனின் சீரழிவுக்கு அரசியல் மட்டும் காரணமா? எதன் மீது நம்பிக்கை கொள்வது எனத் திசையறியாமல் தேடியலைகிற இளைஞர்களை உருவாக்குகிற நவீன வாழ்க்கையும் அபத்தமாகிப் போவதுதான் முரண். இலக்கியம் வாழ்வின் உன்னதங்களை மெல்லிய குரலில் பேசும் வல்லமையுடையது என்ற நம்பிக்கை இன்று சிதலமாகி விட்டது.

படைப்பாளி ஒருபோதும் கற்பனை செய்யமுடியாத சம்பவங்கள் யதார்த்த வாழ்வில் சாதாரணமாக நடைபெறுகின்றன. குறிப்பாக உலகமயமாக்கலின் விளைவான அரசியல் ஆதிக்கம் உலகமெங்கும் பரவலாகிய பின்னர், மனித வாழ்க்கை முற்றிலும் மாறி, புதிய தடத்தில் பயணிக்கிறது. சந்தைக்கான பொருட்களின் பரிவர்த்தனையில் மனித உடல்களும் அடங்குகின்றன. தமிழில் நாவல்கள் படைப்பாக்கத்தில் உலகமயமாக்கல் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள், நவீனத் தமிழர் வாழ்க்கை குறித்து முடிவற்ற கேள்விகளை எழுப்புகின்றன.

(நன்றி: உயிர்மை, ஏப்ரல், 2017)